**<u>அசல் வழக்கு எண். 14/2020</u>**

15.07.2025

**பெயர் – ஜெயந்தி** (DW1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

01.07.2025 ம் தேதி குறுக்கு விசாரணை பாரா 1 முதல் 3 பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 4 முதல் பதிவு செய்யப்படுகிறது.

(4) தாவாச் சொத்து மற்றும் இதரச சொத்துக்கள் மாரப்ப கவுண்டர் மற்றும் சுப்பே கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவர்கள் இறப்பிற்கு பிறகு அவர்கள் வாரிசுகள் 29.06.1977 ம் தேதி தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். பாகம் செய்யும் போது மொத்தம் எத்தனை ஏக்கர் இருந்தது என்றால் மாரப்ப கவுண்டர் வகையறாவிற்கு சுமார் 50 ஏக்கரும், சுப்பே கவுண்டர் வகையறாவிற்கு சுமார் 50 ஏக்கரும் இருந்திருக்கும். மொத்தம் உள்ள 6 ஏக்கர் 9 செண்டில் வேலுச்சாமி கவுண்டர் வகையறாவிற்கு பொதுவில் சரிபாதி என்றால் சரிதான். ஆனால் செக்குபந்தி எதுவும் போடாமல் பிரித்துள்ளார்கள். அதே போல் பழனிச்சாமி கவுண்டருக்கு பொதுவில் சரிபாதி 3 ஏக்கர் 4 ½ செண்ட் என்றால் சரிதான். வேலுச்சாமி கவுண்டர் வகையறாவிற்கு பிரிந்த சொத்துக்களைப் பொறுத்து 15.11.1977 ம் தேதி அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டர் வகையறாவிற்கு பிரிந்த சொத்துக்களை அவர்கள் 16.04.1984 ம் தேதி பாகம் பிரித்துக்கொண்டார்கள். அதில் பழனிச்சாமி கவுண்டர் பாகமாக 3 ஏக்கர் 4 ½ செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தைப் பொறுத்து எனது கணவருக்கு 26.09.2008 ம் தேதி பழனிச்சாமி கவுண்டர் தானம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த சொத்து க.ச.எண். 497/7 ல் 3 ஏக்கர் 4 ½ செண்ட் என்றால் சரிதான்.

(5) எனது கணவர் 09.07.2009 ம் தேதி 1 ஏக்கர் 52 ¼ செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான் பழனிச்சாமி கவுண்டர் எனது கணவருக்கு தானம் எழுதி வைத்த போதும் எனது கணவர் ஆறுமுகம் என்பவருக்கு கிரையம் செய்து தந்த போதும் பொதுவில் சரிபாதி என்று தான் கொடுக்கப்பட்டுள்ளது. எனது கணவருக்கு 26.09.2008 ம் தேதி எழுதி வைக்கப்பட்ட தான சொத்துக்களை அவர் ஓட்டி வந்தார். எனது

கணவர் கிரையம் செய்து கொடுத்த 1 ஏக்கர் 52 ¼ செண்ட் நிலத்தை ஆறுமுகம் ஓட்டி வந்தார். கிரையம் கொடுத்தது போக மீதி நிலத்தை எனது பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த நிலத்தை நான் தற்போது ஓட்டி வருகிறேன்.

(6) ஆறுமுகம் தான் கிரையம் பெற்ற நிலத்தை தனது மனைவி பொன்மணி பெயரில் தானமாக எழுதி வைத்துவிட்டார். பொன்மணி தற்போது அந்த நிலத்தை ஓட்டி வருகிறார். மாரப்ப கவுண்டர் வகைறாக்களுக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் 40 ஏக்கர் நிலத்தில் ஏதாவது சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். மாரப்ப கவுண்டர் மற்றும் சுப்பே கவுண்டருக்கு பிரிந்ததாக சொல்லும் மொத்த சொத்தும் பொதுவில் சரிபாதி என்று தான் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து மட்டும் தான் 1977 பாகப் பத்திரத்தில் பொதுவில் சரிபாதி என்று பிரிக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் பாகப் பத்திரத்தில் மொத்த சொத்தும் பொதுவில் சரிபாதி என்று தான் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(7) தாவாச் சொத்தான க.ச.எண்.497/7 ல் மொத்தம் 6 ஏக்கர் 9 செண்டில் 29.06.1977 ல் பாகம் செய்யப்பட்ட போது பொதுவில் சரிபாதி வடபுறம், தென்புறம் என்று பாகம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல சாலையில் இருந்து நேரடியாக செல்வதற்கு வசதியாக பொதுவில் சரிபாதி மேல்புறம், கிழபுறம் என்று பாகம் செய்யப்பட்டது. நான் செல்வது போல 29.06.1977 ல் பத்திரத்தில் மேல்புறம், கிழபுறம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாங்கள் அப்படித்தான் ஓட்டி வருகிறோம். நான் சொல்வது போல மேல்புறம், கிழபுறம் என்று ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. 1977 பாகப் பத்திரித்தில் ஏ செட்யூல் மற்றும் பி செட்யூல் என்று பொதுவில் சரிபாதி என்று பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1977 பாகப் பத்திரித்தில் க.ச.எண்.497/7 தென்புறம், வடபுறம் என்று பாகம் செய்யப்பட்டது என்றும் வாதி தனது கணவருக்கு பிரிந்த பாகத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான், எனது கணவர், எனது மாமனார் வடபுற பாகத்தை ஒப்புக்கொண்டு தற்போது வரை ஓட்டி வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1977 பாகப் பத்திரித்தில் பொதுவில் சரிபாதி என்று குறிப்பிட்டிருந்த போதும் அனுபவத்தின் அடிப்படையில் அதை நான் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

(8) பி.வா.சா.ஆ.17 ஒப்படைப்பு ஆவணத்தில் 7 வது ஆவணமாக 29.11.2014 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலரின் சுவாதீன சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது பாகமாக வடபுற பாகத்தை ஒப்புக்கொண்டு அது சம்மந்தமாக சுவாதீன சான்றிதழ் பெற்று கடன் பெற்றுள்ளேன் என்றும் தற்போது பாகத்தை மறுத்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

(9) கடந்த 12.10.1977 ம் தேதி வேலுச்சாமி கவுண்டர் வகையறா தங்கள் பூமிகளை குத்தகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் குத்தகைக்கு விட்டதாக ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் ஆனால் அவர்களே தான் ஓட்டி வந்தார்கள் என்று எனது மாமனார் என்னிடம் சொன்னார். அந்த குத்தகையை 07.10.1987 ம் தேதி ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல குத்தகைக்கு விடவில்லை. குத்தகை பத்திரம் மற்றும் குத்தகை ரத்து பத்திரம் வாதியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதை நான் பார்த்துள்ளேன். அந்த குத்தகை பத்தித்தில் எனது மாமனார் பழனிச்சாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வேலுச்சாமி கவுண்டர் வகையறா குத்தகை பத்திரம் மற்றும் குத்தகை ரத்து பத்திரத்தில் பொதுவில் சரிபாதி தென்புறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் எனது மாமனார் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளார் என்றால் பொதுவில் சரிபாதி தென்புறம் என்று பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது எனது மாமனார் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. எனது மாமனார் வடபுறம் பகுதி அவருடையது என்றும், வாதிக்கு தென்புற பகுதி என்று ஏற்றுக்கொண்டு கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்